பக்கங்கள் 18 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 30 வெள்ளிக்கிழமை 12.04.2024 அதிர்வு 256

## எஸ்.ரி.எவ். அதிகாரி மீது கத்திக் குத்துத் தாக்குதல்

### பாடசாலை மாணவன் கைது

(மன்னார் நிருபர்)

குற்றச் செயல் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருந்த நபர்களைக் கைது செய்ய முயன்ற விசேட அதிரடிப் படை 04

# தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த சிறி கொள்கையளவில் இணக்கமாம்

### அவசரமாகக் கூடுகின்றது தமிழரசின் மத்திய குழு வழக்குக் குறித்தும் இறுதித் தீர்மானம் எடுக்க முடிவு



**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதற்குக் கொள்கைய ளவில் இணக்கம் தெரிவிக்கும் அதேநேரம், கட்சியின் தீர்மானமும் முக்கியமானது என்று இலங்கைத் தமழரசுக் கட்சியின் யாழ்ப் பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பில் ஊடகங் களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற் கான முன்முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

தற்போதைய நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட எந்தவொரு விடயத்திலும் கரி சனைகளைக் கொண்டவர்களாகத் தம்மை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே, எந்த அடிப்படைகளுமின்றி தென்னிலங்கை வேட்பாளர் 04

# தொழில் வழிகாட்டல் அதிகாரி கோர விபத்தில் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற டிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரியான கோண்டாவிலைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை ஈஸ்வரன் (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி கல்வி அதிகாரி பாடசாலை ஒன்றில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக நேற்று கோப்பாய் – கைதடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை எதிரே வந்த டிப் பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த அவர், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.







## வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள்

# அழையா விருந்தாளியாக நுழைந்த சிவசேனை எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறினார்கள் மக்கள்

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள் அழையா விருந்தாளியாக சிவசேனை அமைப்பினர் சென்றமையால் ஆலய பக்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறியதுடன் பழைய நிர்வாகத்தைத் தொடரவும் முடிவு எடுத்துள்ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மாவட்ட மட்ட தெரிவுகளுக்கான பொதுக்கூட்டம் இன்று காலை ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆலயப் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், ஆலயப் பக்தர்கள், வேலன் சுவாமிகள், வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டு கூட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன்போது, ஆலய நிர்வாகத்தின் அழைப்பின்றி சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், விபுலானந்த சுவாமிகள் உள்ளிட்ட ஒரு குழுவினர் அங்கு வருகை தந்திருந்தனர். குறித்த குழுவினர் குருந்தூர்மலை விகாராதிபதியை இரகசியமாகச் சந்தித்து அதற்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறி, மக்கள் குறித்த குழுவினரை வெறியேறி நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கோரினர். அத்துடன் சிவசேனை முன்னிலையில் நிர்வாகத் தெரிவு இடம்பெறமாட்டாது எனவும், வெடுக்குநாறிமலையில் பல பிரச்சினைகள் நடந்தும் சிவசேனை அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவில்லை எனவும், ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை எனவும் மக்கள் தெரிவித்ததுடன், அவர்களை வெளியேறுமாறும் கோரினர்.

எனினும், சிவசேனை அமைப்பினர் வெளியேறாமையால் ஆத்திரமடைந்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஆலயப் பக்தர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியதுடன், ஒரு வருடத்துக்குத் தற்போதைய நிர்வாக சபையே தொடர்ந்து இயங்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியதுடன், மக்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

மக்கள் சென்ற பின்னும் சிவசேனை அமைப்பினர் பொது நோக்கு மண்டபத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.













# நெடுந்தீவை முன்னேற்ற விசேடமாக நிதி ஒதுக்கீடு!

## அமைச்சர் டக்ளஸ் தேவாவானந்தா தெரிவிப்பு

நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல் மற்றும் பிரதேசத்தின் உட்கட்கமைப்பு வசதிகளை மேம்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே குறித்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதேபோன்று பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான கடல் போக்குவரத்து, வீதிப் போக்கு வரத்து, விவசாயம், கடற்றொழில், கால் நடை அபிவிருத்தி, நீர்பாசனம், உட்பட பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக் கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

நெடுந்தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலமைகளையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அறிந்து கொண்டதாகவும், ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நெடுந்தீவுக்கான விசேட நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



# மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளராக வைத்திய கலாநிதி முரளீஸ்வரன் பதவியேற்பு!



(பழுவூரான்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரன் வியாழக்கிழமை (11) தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றிய வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் பதவி உயர்வு பெற்று வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு பணிப்பாளராக கடமைப் பொறுப்பேற்றுள்ளார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரன் தமது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் புதிய பணிப்பாளராக கடமையேற்றுள்ள வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரனை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதி பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆர்.நவலோஜிதன் உள்ளிட்ட வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார பணிமனையின் உயரதிகாரிகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வரவேற்றனர்.





# சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் ஊடுருவிய யாழ். இளைஞர்களுக்குச் சிறைத் தண்டனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில இருந்து ட்ரோலர் படகில் சென்று இந்தியாவின் தொண்டிப் பகுதியில் இறங்கிய இருவருக்கு 7 மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் – குருநகரில் இருந்து சென்று தமிழகம் – தொண்டிப் பகுதியில் இறங்கிய வேளை தமிழக மீனவர்கள் வழங்கிய தகவலுக்கமைய தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவருக்கே தற்போது 7 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் ஊடுருவினார்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ். குருநகரைச் சேர்ந்த சீலன் (வயது 27) மற்றும் அருள்தாஸ் (வயது 34) ஆகிய இருவர் மீதும் திருவாடானை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் இருவருக்கும் 7 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை மாணவிக்கு சைக்கிள் வழங்கி வைப்பு!




(பழுவூரான்)

கனடாவில் இயங்கிவரும் உதவும் பொற்கரம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் குணராசா கணபதிப்பிள்ளையிடம் மட்டக்களப்பு சின்ன ஊறணி கிராமத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் தாய் ஒருவரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலை செல்லும் மாணவிக்குச் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது. உதவும் பொற்கரம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் குணராசா கணபதிப்பிள்ளையின் சிபாரிசுக்கு அமைய இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாணவியின் தந்தை சுகயீனமுற்ற நிலையில் வாழ்வாதாரம் இன்றி வறுமையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்ப் பொது...

களை ஆதரிப்பது பொருத்தமற்றதொரு முயற்சியாகும். அந்தவகையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை நிறுத்துகின்றமை பொருத்தமான அணுகுமுறையாகும்.

அந்த முயற்சிக்கு நான் கொள்கை அளவில் இணக்கம் தெரிவிக்கின்றேன். எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினுள் இந்த விடயம் சார்ந்து கலந்துரையாடி கட்சியாக தீர்மானம் எடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகின்றது.

ஆகவே, இந்த விடயம் சம்பந்தமாக கட்சியாக கூடி ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. எதிர்வரும் 20 ஆம் திகதிக்கிடையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடவுள்ளது. அதன் போதே தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும். இந்தக் கூட்டத்தின்போது தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு குறித்தும் பேசவுள்ளோம்." – என்றார்.

### எஸ்.ரி.எவ்...

அதிகாரி மீது தாக்குதல் நடத்திய 17 வயது இளைஞர் ஒருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார், பெரிய கரிசல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றது.

குற்றச் செயல் ஒன்றைப் புரிவதற்காகத் தயார் நிலையில் இருந்த நபர் ஒருவரைக் கைது செய்வதற்காக விசேட அதிரடிப் படையினர் மன்னார் – பெரிய கரிசல் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பை நடத்தினர்.

இதன்போது மேற்படி சந்தேகநபரிடமிருந்து 3 கூரிய வாள்கள், கத்திகள் மற்றும் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து 40 வயதான சந்தேகநபரும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான 17 வயது இளைஞர் ஒருவர் கூரிய கத்தியால் விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதலை நடத்தியபோது அவரும் கைது செய்யப்பட்டார்.

இதன்போது காயத்துக்குள்ளான விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவர் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.கைது செய்யப்பட்ட 17 வயதுடைய இளைஞர் பாடசாலை செல்லும் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.



# கல்முனை வலய அலுவலகத்தில் பாராட்டும், பிரியாவிடை நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லும் இரு ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளான பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர்), யூ.எல். சாஜித் (உதவிக்கல்விப் பணிப்பாளர்-உடற் கல்வி மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்), என். எம்.ஏ.மலீக் (உதவிக் கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம் மற்றும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர்) ஓய்வு பெறும் இரு ஆசிரிய ஆலோசகர்களான சீ. செல்வராஜா (விவசாயம்), எம்.எஸ். சஹுதுல் அமீன் (விஞ்ஞானம்) ஆகியோர் பாராட்டி, நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், எம்.எச். றியாஸா, என். வருண்யா, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. சன்ஜீவன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு விஷேட உரைகளை ஆற்றினர்.

நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வினை ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸிக் நெறிப்படுத்தினார்.

ஆசிரிய ஆலோசகர்களான ரீ.கே. பத்திரன, எம். லக்குணம் ஆகியோரும் விடைபெறும் அதிதிகள் தொடர்பில் சிறப்புரையாற்றினர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜனநாயக வாதியா? ஜனநாயக விரோதியா?

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' எனக் கூறுவார்கள்.

பெரும்பாலும் அரசியல்வாதிகள் விடயத்தில் இது கனகச்சிதமாகப் பொருந்தும்.

நாட்டின் இப்போதைய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக் கொள்வோம். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியை அவர் ஏற்று 30 ஆண்டுகளாகின்றன.

இந்த முப்பது ஆண்டுகளில் அவர் ஆளுந்தரப்பில் இருந்தது வெறும் எட்டு, ஒன்பது ஆண்டுகள் கூட இல்லை. அவரது ராசி அப்படி.

எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த போதெல்லாம் ஜனநாயகத்துக்காகவும் மக்களின் வாக்களிக்கும் உரிமைக்காகவும் குரல் எழுப்பியவர் அவர். அதற்காகப் போராடியவர்.

தேர்தல் போன்ற விடயங்களைச் சுயாதீனமாகக் கையாள வகை செய்யும் அரசமைப்பு கவுன்ஸில் என்ற கட்டமைப்பு ஏற்பாடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது, 2001 செப்டம்பரில் 17 ஆவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அதில் காத்திரமான பங்கையாற்றியவர்.

அந்த சுயாதீனத் தேர்தல் முறைமைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அரசமைப்பின் 18 ஆம் திருத்தம் மூலமும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 20 ஆம் திருத்தம் மூலமும் நலிவுபடுத்தப்பட்டன.

எனினும், அந்த நடவடிக்கைகளுக்கு மாறாக அரசமைப்பு கவுன்ஸிலின் சுயாதீனத் தன்மையை மீண்டும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் அரசமைப்பின் 19 ஆம் மற்றும் 21 ஆம் திருத்தங்கள் மூலம் கொண்டுவரப்பட்டன. இதில் 19ஆம் திருத்தத்தை ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆட்சிக்காலத்தில் நல்லாட்சியின் பிரதமராக இருந்து ரணில் விக்கிரமசிங்கவே கொண்டு வந்தார். 21 ஆம் திருத்தம் இப்போது ரணில் ஜனாதிபதி ஆக இருக்கும் போது அவரது வழிகாட்டலில் நிறைவேற்றப்பட்டது.

இப்படிப் பார்த்தால் நாட்டில் ஜனநாயகக் கட்டமைப்புகளையும் தேர்தல்களையும் சுயாதீனமாக நடைபெற வழிப்படுத்தியவர்களில் முக்கியமானவராகக் கருதப்பட வேண்டியவர் ரணில் விக்கிரமசிங்க.

பொதுவாக அத்தகைய அணுகுமுறையில் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க, அரசியலில் தனக்குத் தனக்கு என்று வரும்போது ஜனநாயக விழுமியங்களைத் தூக்கி மிதித்தமையைத்தான் வரலாறு நமக்குப் பட்டறிவாக உணர்த்தி நிற்கின்றது.

நல்லாட்சிக் காலத்தில் இரண்டு மாகாண சபை தேர்தல்களை எதிர்கொள்ள இயலாமல் - எதிர்கொண்டால் படுதோல்வி கிட்டும் என்ற பயத்தில் - அந்த மாகாண சபைத் தேர்தல்களையே நடைமுறையில் இல்லாமல் செய்த பெரும் அரசியல் கில்லாடி அவர்.

ஜனநாயகத்துக்கும், மக்களின் வாக்களிப்பு சுதந்திரத்திற்கும், உரிமைக்கும் குரல் எழுப்பி வந்த ரணில் விக்கிரமசிங்க, தமது சொந்த அரசியல் என்று வந்ததுமே அந்த நியாயத்தை எல்லாம் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசி விடுகிறார்.

2022 ஜூலையில் நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி தமது மடியில் தேடி வந்து விழுந்ததும், பதவியாசை அவரைப் பற்றிக் கொண்டு விட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் நின்று வெற்றி பெற வேண்டுமானால், அதற்கிடையில் எந்தத் தேர்தலாவது நடந்து, அதன் மூலம் எதிர்க்கட்சிகள் பலம் பெற்றுவிட இடமளிக்கவே கூடாது என்று சதித்திட்டம் வகுத்தார் அவர். அதனால் கடந்த வருடம் மார்ச்சில் நடந்திருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு நிரந்தரமாக ஆப்படித்தார் அவர். வேட்புமனக்களும்ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒரு தொகுதி வாக்கு சீட்டுகளும் அச்சிடப்பட்ட நிலையில் அந்தத் தேர்தலுக்கு நிரந்தரமாகத் தடை விதிக்கும் சதி வேலையை அவர் கனகச்சிதமாக முன்னெடுத்தமை தன்னுடைய தனிப்பட்ட அரசியல் சுயலாபம் கருதி மட்டும்தான் என்பது ஊர் அறிந்த உண்மை.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் சுயலாப அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, மக்களின் ஜனநாயக உரிமைகளும் தேர்தல்களும் பந்தாடப்படுவது இலங்கையின் சாபக்கேடு.

தேர்தல்களின் சுயாதீனத் தன்மை அறுதியிட்டு உறுதிப்படுத்தப்படும் வரை, இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருப்பதாகக் கூறுவது வெறும் வாய்ச்சவடால் பேச்சாகத்தான் இருக்க முடியும்.



# பரசூட் முறையிலான நெற்செய்கை கொக்கட்டிச்சோலையில் ஆரம்பம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக் கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலைய பகுதியில் விவசாய போதனா சிரியர் என். பார்த்தீபன் தலைமையில் வயல்விழா நடைபெற்றது.

இதன்போது பரசூட் முறையிலான நெற்செய்கையின் நன்மைகள் பற்றிய தெளிவான விளக்கங்களுடன் பரசூட் முறையில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்கள் என்பன முறையான செய்து காட்டப்பட்டன. விவசாயப் போதனா சிரியர்களால் இது தொடர்பில் விளக்க மளிக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவி விவசாய பணிப்பாளர்களான திருமதி நித்தியா நவரூபன், எஸ்.சித்திரவேல் பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யா செந்தீபன், லக்ஸ்மன், மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபி விருத்தி உத்தியோகத்தர் மற்றும் கொக்கட்டிச்சோலை விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏற்கனவே பரசூட் தட்டுக்களில் இடப்பட்ட நாற்றுகள் நடுகை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக் கது.

பரசூட் முறையிலான நெற்செய்கை யின் போது எமது செலவினை குறைத்து அதிக விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக ஒரு ஏக்கருக்கு 8-12 கிலோ விதைநெல் போதுமானது என்பதால் மிகக்குறைந்த செலவே ஏற்படும் எனவே விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக வருமானம் ஈட்டுவதற்கு விவசாய திணைக்களத்துடன் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என பிரதி விவசாய பணிப்பா ளரும் தன்னுடைய உரையில் தெரிவித் துள்ளார்.












# சிலோன் ஊடகவியலாளர் போரத்தின் கௌரவிப்பும் உலர் உணவு வழங்கலும்

(எஸ்.அஷ்ரப்கான்)

சிலோன் ஊடகவியலாளர் போரத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக சேவையாளர் கௌரவிப்பும் ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை (09) அட்டாளைச்சேனை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றன.

சிலோன் ஊடகவியலாளர் போரத்தின் தலைவரும், அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் செயலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளரும் தொழிலதிபருமான ஏ.கே.அமீர் கௌரவ அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் ஏ.எல்.பாயிஸ் மற்றும் அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் பிரதித் தலைவர் டாக்டர் ஏ.எல்.இஸ்மாயில் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் மிக நீண்டகாலமாக சமூகப் பணிகளை மேற்கொண்டுவரும் நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான உதுமான்கண்டு நாபீர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளரும் தொழிலதிபருமான ஏ.கே. அமீர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் ஏ.எல்.பாயிஸ் ஆகியோர் இந்நிகழ்வின்போது சிலோன் ஊடகவியலாளர் போரத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களைச் சேர்ந்த 35 ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.



# சமுர்த்தி அபிமானி புத்தாண்டு சந்தை நாவிதன்வெளியில்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி புத்தாண்டு சந்தை நாவிதன் வெளி பிரதேச செயலக திறந்த வெளியில் நடைபெற்றது.

புத்தாண்டு கொண்டாட்டத்துக்காகத் தயாராகிவரும் பொது மக்களுக்குத் தேவையான பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பிரதேச செயலகங்கள் ரீதியாக 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தையை நடத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எஸ்.சிவம் தலைமையில் இடம்பெற்ற புத்தாண்டுச் சந்தை ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் திருமதி ராகுல நாயகி சஜிந்திரன் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா உட்பட சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அதிதிகள் வியாபார நிலையங்களை திறந்து வைத்ததுடன். விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களையும் பார்வையிட்டனர். இங்கு கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பூநகரி உணவகங்களில் சோதனை

(த.சுபேசன்)

புது வருடப் பிறப்பு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பூநகரிப் பகுதியில் விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகள் பூநகரி பொது சுகாதாரப் பரிசோதகர் குழாமால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் பிரிவுகளின் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகளை நடத்தினர்.

இதன்போது வாடியடி, ஞானிமடம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, முழங்காவில் போன்ற பகுதிகளில் உள்ள உணவகங்களில் இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பரிசோதனைகளில் மீட்கப்பட்ட சுகாதாரத்துக்கு கேடான பொருள்கள் வர்த்தகர்களின் சம்மதத்தோடு அழிக்கப்பட்டன. மீட்கப்பட்ட ஒருதொகுதி உணவுப் பொருள்களைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அத்துடன் வீதியோரங்களில் சுகாதாரமற்ற முறையில் பழச்சாறு, வடை மற்றும் சர்பத் வியாபாரம் செய்வோர் எச்சரிக்கப்பட்டனர். சரியான சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது. மீறிச்செயற்படுவோர் மீது தொடர் கண்காணிப்பின் பின்னர் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் பூநகரி சுகாதாரப் பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தொழில்நுட்ப உலகை வெல்லும் வகையில் மாணவர்கள் திறன்களை வளர்க்க வேண்டும்

## சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உதயசீலன் தெரிவிப்பு



(த.சுபேசன்)

தொழில்நுட்ப உலகை வெற்றி கொள்ளக் கூடியவர்களாக மாணவர்கள் தமது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் செயலாளருமான எஸ்.உதயசீலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி, கைதடி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், உலக நாடுகள் தொழில் நுட்ப ரீதியாக தமக்குள் போட்டி போட்டு வளர்ந்து வருகின்றன. எனவே தொழில்நுட்ப உலகுக்கு ஏற்ற விதத்தில் எமது இளைஞர், யுவதிகளும் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த விதத்தில் எமது யாழ். மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழில் நுட்ப அறிவை ஏற்படுத்தும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனுடைய முயற்சியில் இலவசமாக கணணி மற்றும் கோடிங் கற்கை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியிலும் அண்மையில் இந்தக் கற்கை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இலவச கற்கையை பயில்வதன் ஊடாக எமது இளைஞர், யுவதிகள் தொழில்நுட்ப வல்லுனர்களாக உருவாக முடியும்.

அத்துடன் இந்த இலவசக் கற்கையானது இலங்கையினுடைய ருகுணு, மொரட்டுவ மற்றும் களணிப் பல்கலைக் கழகங்களால் அங்கீகரிங்கப்பட்டுள்ளது.

எமது கற்கை நிலையத்தில் 324 கற்கைப் பிரிவுகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பல்கலைக்கழகங்கள் ஊடாக பட்டம் பெற முடியும். ஏனைய மாணவர்கள் 4 வருடங்களில் பூர்த்தி செய்யும் பல்கலைக்கழக கற்கையை எமது மாணவர்கள் வெறுமனே ஒன்றரை வருடங்களில் பெற்று தொழில் உலகுக்குத் தயாரானவர்களாக தம்மை மாற்றியமைக்க முடியும்.

எனவே மாணவர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்திருக்கும் இளைஞர், யுவதிகள் இந்த இலவசக் கற்கை நெறியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனூடாக வெளிநாடுகளுக்குச் சென்று தேட வேண்டிய வருமானத்தை எமது பிரதேசத்தில் இருந்து கொண்டே ஈட்டிக்கொள்ள முடியும்.– என்றார்.







# கௌரவிப்பு நிகழ்வு!

(எஸ்.அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பள்ளி வாசல்களில் கடமையாற்றும், நாபீர் பவுண்டேஷன் மூலம் பள்ளி வாசல்களில் கடமையாற்றும் அத்தின் மற்றும் கதீப்மார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்முனை நூராணியா பள்ளி வாசலில் நாபீர் பௌண்டேஷனின் ஸ்தாபகர் பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர்தலைமையில் இடம்பெற்றது.

இங்கு நாபீர் பௌண்டேஷனின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பாயிஸ் கரீம் உட்பட அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# மண்ணைப் பொன்னாக்கும் முல்லைப் பெண்மணி!

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முத்தஜன்கட்டு கிராமத்தில், களிமண்ணால் ஆபரணங்களை உற்பத்தி செய்து, முமைை Collection என்ற பெயரில் விற்பனை செய்து வளர்ந்து வருகின்றார் ஒரு இளம்தொழில் முயற்சியாளர், கலைத்திறனாளி மற்றும் பல்கலைக் கழகப் பட்டதாரி திருமதி நிதுசா கிருசாந்.

அவருடனான செவ்வி இது.

**கேள்வி:** களிமண்ணில் ஆபரணங்களை உற்பத்தி செய்யும் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

**பதில்:** எனக்கு சிறுவயதிலிருந்து களிமண்ணை பயன்படுத்தி பொருள்கள் செய்யும் பழக்கம் உள்ளது. இருந்தும் 2020 ஆம் ஆண்டு கொரோனா காலமாகையால் அதிக நேரம் எனக்கு கிடைத்தது. அந்த நேரத்தில், இந்தியாவின் மும்பை பிரதேசத்தில் வசிக்கும் களிமண் ஆபரணங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் ஒருவரிடம் தொடர்பு மேற்கொண்டு, நிகழ்நிலை (online - zoom) ஊடாக களிமண்ணில் ஆபரணங்களை உற்பத்தி செய்வது பற்றி கற்றுக்கொண்டேன்.

பின்னர், நான் களிமண்ணில் ஆபரணங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தேன். இதனைப் பெற்றுக் கொண்ட எனது நண்பர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எனக்கு பல வாழ்த்துக்கள், பாராட்டுக்களை தெரிவித்தனர். அதாவது “இலங்கையில் முதன் முதலில் உங்களிடமே இந்த ஆபரணங்களை பெற்றுக்கொண்டுள்ளேன்” என்ற வார்த்தைகள் என்னை இத்துறையில் ஆர்வத்துடன் பயணிக்க வைத்தது. இதன் பின்னரே ஒரு கைத்தொழிலை மேற்கொள்ளலாம் என என்னி இந்தத்தொழிலை தொடங்கினேன்.

**கேள்வி:** இவ் ஆபரணங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்களை எவ்வாறு பெற்றுக் கொள்வீர்கள்?

**பதில்:** இங்கு பிரதான மூலப்பொருளான களிமண் உள்ளது. களிமண்ணை என்னுடைய பிரதேசத்தில் இருந்தே பெற்றுக் கொள்கின்றேன். ஆபரண உற்பத்திக்கு தேவையான மற்றைய அனைத்துப் பொருள்களையும் இந்தியாவிலிருந்து தான் பெற்றுக்கொள்கின்றேன்.

**கேள்வி:** நீங்கள் எவ்வகையான ஆபரணங்களை உற்பத்தி செய்கின்றீர்கள்?

**பதில்:** இயற்கை களிமண்ணிலான கழுத்து மாலைகள், ஜிமிக்கிகள், தோடுகள், பென்ரன், சிலைகள், திருமணப் பெண்களுக்கான ஆபரணங்கள், அலுவலப் பெண்களுக்கான ஆபரணங்கள் மற்றும் சுவர் ஓவியங்கள் என அனைத்து வகையான ஆபரணங்களையும் உற்பத்தி செய்கின்றேன்.

**கேள்வி:** இவ்வாறு உற்பத்தி செய்யும் ஆபரணங்களின் உறுதித் தன்மை எவ்வாறு உள்ளன?

**பதில்:** களிமண் மற்றும் சுடுமண் ஆபரணங்கள், ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நாம் கீழடி ஆய்வுகளிலிருந்து அறிந்துள்ளோம். ஓடு, மண்சட்டி போன்ற களிமண்ணால் உற்பத்தி செய்த பொருள்களை நாம் வாங்கும் போது, எவ்வாறு உடையாமல் பயன்படுத்துகின்றோமோ அதே போன்று தான் இந்தக் களிமண் ஆபரணங்களை வாங்குவோர் பயன்படுத்தும் முறையில் எத்தனை மாதங்கள் அல்லது வருடங்கள் என்பது தங்கியுள்ளது.

**கேள்வி:** நுகர்வோர் மத்தியில் இவ் ஆபரங்களுக்கான கேள்வி எவ்வாறு உள்ளது?

**பதில்:** ஆரம்பத்தில், அறிமுகம் இல்லாதவர்களிடமிருந்து, இது உடையுமா? தண்ணீரில் கரையுமா? என பல கேள்விகள் எழுந்தன. பின்பு, பலர் எனது ஆபரணங்களை அணிந்து, புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்ட போது என் உற்பத்தி பற்றி பிரபல்யமாக (Trending ) பேசப்பட்டது.

பின்னர் எனது உற்பத்திகள் இலங்கை மட்டுமின்றி ஏனைய நாடுகளிலும் விநியோகிக்கும் நிலை ஏற்பட்டன. தற்பொழுது வித்தியாசமான முறைகளில் ஆபரணங்களை அணியும் பெண்களுக்கு இதில் அதிக விருப்பமுள்ளதால், நுகர்வோர் மத்தியில் என்னுடைய ஆபரணங்களுக்கான கேள்விகள் அதிகமாகவே உள்ளன.

**கேள்வி:** உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எவ்வாறான முறைகளில் சந்தைப்படுத்தலை மேற்கொள்கின்றீர்கள்?

தொடர்ச்சி▼






# மண்ணைப் பொன்னாக்கும் முல்லைப் பெண்மணி!

தொடர்ச்சி▲

**பதில்:** என்னுடைய உற்பத்திகளை அதிகம் ஆன்லைன் (Online) மூலமே விற்பனை செய்கின்றேன். இலங்கையில் Cash and Delidelivery மூலமும் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்பவர்களுக்கு, பணத்தை செலுத்திய பின்பு ஆபரணங்களை அனுப்பி வைப்பேன். சில வேளைகளில் அவர்களது உறவினர்கள் மூலமும் வழங்கிவைப்பேன்.

**கேள்வி:** அரச நிர்வாகங்களில், உங்களுடைய உற்பத்திக்கான அங்கீகாரம் எவ்வாறு உள்ளன?

**பதில்:** பிரதேச செயலகம், தொழில்துறைத் திணைக்களம் போன்ற பல அரச நிறுவனங்கள் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களை சிறந்த முறையில் ஊக்குவிக்கின்றனர். சர்வதேச சந்தையில் எனது பொருள்களை கொண்டு செல்லும் முயற்சிக்கு அரச தொழிற்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது.

**கேள்வி:** இக்கைத்தொழிலைவிருத்திசெய்வதற்கான, உங்கள் எதிர்கால திட்டங்களை கூறுங்கள்?

**பதில்:** எங்களுடைய நாட்டை விட ஏனைய நாடுகளில், இவ் ஆபரணங்களுக்கான கேள்வி அதிகமாகவே உள்ளது. ஏனைய நாடுகளுக்கு எமது பாரம்பரிய பொருள்களை ஏற்றுமதி செய்வது கடினமான விடயம் எனலாம். எனவே எனது உற்பத்திகளை, எவ்வாறு இலகுவான முறையில் எல்லா நாடுகளிலும் அறிமுகப்படுத்தலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். இதன் பின்னர் இந்த உற்பத்தியில் தொழில்புரிய ஆர்வமுள்ளவர்களை உள்வாங்கி கைத்தொழில் நடவடிக்கையை விரிவுபடுத்த விரும்புகிறேன்

**கேள்வி:** இத்துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்?

**பதில்:** சவால்களை பொறுத்தவரையில் கேள்விக்கு ஏற்றவாறு பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருள்கள் இலங்கையில் எப்பாகத்திலும் கிடைப்பதில்லை. எனவே இதற்காக இந்தியாவிடம் இருந்து இறக்குமதி செய்யவேண்டியுள்ளது இதற்கு அதிக நேரம் மற்றும் பணம் என்பன செலவாகின்றன. அது மட்டுமல்லாது இந்தக் கலையை மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கும் பொழுது அவர்கள் ஆர்வத்துடன் பழகுவது குறைவாக உள்ளது.

**கேள்வி:** இந்தத் துறையில் பயணிக்கும் உங்களுக்கு கிடைக்கப்பெற்ற விருதுகள் மற்றும் கௌரவங்கள் பற்றி கூறுங்கள்?

**பதில்:** விருதுகளை பொறுத்தவரையில் அதற்கு நான் இன்னும் வளர வேண்டியுள்ளது என்று எண்ணுகின்றேன். இருப்பினும் 2023 ஆம் ஆண்டு அகில இலங்கை அழகுக்கலை, அழகுசாதனவியல் நிபுணர்கள் சம்மேளனம் மற்றும் சூரியா மகளிர் பேரவையும் இணைந்து “சிகரம் தொட்ட பெண்” என்ற விருதை வழங்கினர். பின்பு தமிழர் பொருண்மியத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான “இளம் தொழில் முயற்சி யாளருக்கான விருது” வழங்கப்பட்டது.

இறுதியாக 2024 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினமன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்துக்கான மையம் (Centre for Gender Equity and Equality (CGEE) “ஒரு வெற்றிகரமான பெண்” (SUCCESSFUL WOMAN) என்ற விருதை வழங்கியது.

**கேள்வி:** நம் நாட்டில் பலர் படித்தும் வேலை இல்லை எனக் கூறுகின்றனர். இதை பற்றி உங்கள் கருத்து?

**பதில்:** ‘கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை இல்லை என்று ஒத்துக்கொள்’ எனத் தமிழில் பொன்மொழி ஒன்றைச் சொல்லுவர். இது போன்று ஏதோ ஒரு தொழிலையோ அல்லது உற்பத்தியோ விருப்பத்துடன் செய்ய தொடங்குங்கள். தொழிலை தொடங்க முன்பு சமூகத்தில் என்ன சொல்லுவர், இது வெற்றியடையுமா? தோல்வியடையுமா? என தயங்கியிருந்தால் எதிலுமே வெற்றிபெற முடியாது.

ஆரம்பிப்பது கடினம் பின்னர் இலகுவாக நகர்த்தி செல்ல முடியும். ஆகவே முடியும் என உங்களில் நீங்கள் நம்பிக்கை வைத்துத் தொடங்கினால், தொழில்களில் மட்டுமல்ல எதிலும் வெற்றி பெற முடியும் என்றே கூறுவேன்.



**யோகேஸ்வரன் ஜோவர்ணன்.**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை ஏந்தியவர்!



## வாழ்நாள் ஊடகர் பொ.மாணிக்கவாசகம்

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈழத்து ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு (12.4.2024) இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)

ஈழத்தின் போர்க் கால நாள்களில் இரவு 9.15 மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.

போர்க் காலத்தில் வானொலிப் பெட்டிகளுக்கு முன்பாக, ‘இது லண்டன் பிபிசியின் உலக சேவையில் இருந்து முழங்கும் தமிழோசை’ என்ற ஆனந்தியின் அறிவித்தலுடன் ‘வடபுலத்திலிருந்து மாணிக்கவாசகம்’ என்ற அறிவிப்புக்காய் தமிழ் மக்கள் தவமிருந்த காலங்களை மறக்க முடியாது.

### இடர்மிகு காலத்தின் குரல்

நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்த – ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாகப் போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினம இன்றாகும்.

யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன்படுத்தியவரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றிய பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.

போர்க் காலத்தில் வவுனியாவில் இருந்து பொ. மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காது கொடுத்துக் கேட்கக் காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாட்டார்கள்.

வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் – அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக் கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் பத்திரிகையாளராக ஆற்றிய சேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுவுநிலை தவறாது ஆற்றிய பணி மறக்க முடியாதது. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை நேர்மை துலங்கும் வகையில் செய்திகள் தந்தமை மகத்தானது.

### வாழ்நாள் சாதனையாளர் விருது

13.12.2023 இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வீரகேசரியிலும், பி.பி.சியிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிருந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் – திறம்படச் செய்து வந்தவர். அதனைவிட வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவர் பணியாற்றியிருக்கின்றார்.

அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் “கால அதிர்வுகள்”, “வாழத்துடிக்கும் வன்னி”, “மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்” என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.

மறைந்த வாழ்நாள் சாதனையாளர் பொன்னையா மாணிக்கவாசகம், தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.

இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

### தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர்

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப் பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

ஒரு முழு நேர ஊடகவியலாளராக – சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்படையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றார். அவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

பொ. மாணிக்கவாசகம் பத்திரிகையாளராக ஆற்றியசேவை. அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடு நிலை தவறாது ஆற்றிய சேவை பணிமறக்க முடியாதது.

### ‘வென்மேரி’ விருது கௌரவம்

யாழ்ப்பாணத்தில் 18.08.22இல் நடைபெற்ற ‘வென்மேரி விருதுகள்” விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

“வென்மேரி அறக்கட்டளை”யின் முதலாவது விருது விழா நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டிருந்தார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை பாராட்டத்தக்கது.



# நன்னீர் இறால் வளர்ப்பு அபிவிருத்திக் கலந்துரையாடல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நன்னீர் இறால் வளர்ப்பு வேலைத்திட்டங்களை துரிதப்படுத்தி அபிவிருத்தி செய்து புதிய முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சி. சத்திரகாந்தன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திகதி இடம் பெற்றது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாவட்டத்தில் புதிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நன்னீர் இறால் அதனுடன் மீன் மற்றும் நண்டு வளர்ப்பை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

வாகரை பிரதேச செயலக பிரிவில் நீர் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தியை மேற்கொண்டு புதிய முதலிட்டாளர்களை ஊக்குவித்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த ஆளுநர், மாவட்டத்தில் உள்ளூர் இறால் வளர்ப்புக்கு, பல இன இறால்களை உற்பத்தி செய்வதால் அதிகளவான விளைச்சல்கலை பெற்றுக் கொள்வது டன் பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியும் என தெரி வித்தார்.

இராஜாங்க அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், தொழில் வாண்மை நிபுணர்களால் ஆய்வு செய்து சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இறால் வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும். மேலும் இப் பிரதேச மக்களை உள்வாங்கி மக்களுக்கு இறால் வளர்ப்பு தொடர்பான சிறந்த அறிவைக் கொடுத்து உள்ளூர் உற்பத்தியை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாகாண பணிப்பாளர், வாகரை பிரதேச செயலாளர் அருணன் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பிரத்தியோக செயலாளர் த.தஜீவரன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு!

## தௌபீக் எம்.பி. நடவடிக்கை

(எஸ். சினீஸ் கான்)

தோப்பூர் செல்வநகர் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் விவசாய சம்மேளன உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நேற்று (11) செல்வநகர் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்தப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. பிரச்சினைகளைக்கு தீர்வுகளும் எட்டப்பட்டன.

இந்தச் சந்திப்பின்போது திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் பொறியியலாளர் சுப்ரமணியம், விவசாய சம்மேளனத் தலைவர் தாஜ்மீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் றிபாஸ், மத்தியகுழுச் செயலாளர் றநீத் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.



# மட்டு.ஆனைப்பந்தி இந்து மகளிர் தமிழ்மொழி தின நிகழ்வுகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் தமிழ்மொழி தின விழா நேற்று வியாழக்கிழமை (11) ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் நிமாலினி பேரின்பராஜா தலைமையில் நடைபெற்ற பாடசாலை தமிழ்மொழித் தினப் போட்டியில் கல்லூரி மாணவிகளின் கலாசார வாத்திய இசையுடன் அதிதிகள் பாடசாலை பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், தமிழ் தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் என்பனவும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஆன்மீக அதிதியாக ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரா ஆலய பிரதம குரு மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.













## குரோதி வருடப்பிறப்பு – வாக்கிய பஞ்சாங்கம்

13.04.2024 சனிக்கிழமை பி.ப 08 மணி 15 நிமிடத்தில் குரோதி வருடம் பிறக்கின்றது.

### விஷு புண்ணிய காலம் - மருத்துநீர் வைக்கும் நேரம்

13.04.2024 மாலை 04.15 மணி முதல் இரவு 12.15 மணி வரையுள்ள காலத்தில் தலையில் புன்கிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்யவும்

### அணியும் ஆடை - நிறம்

வெண்மை நிறமுடைய பட்டாடை அல்லது வெள்ளைக் கரை அமைந்த பட்டாடை

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1ம் 2ம் 3ம் பாதங்கள், சித்திரை, விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை, அவிட்டம்

### கைவிஷேட நேரங்கள்

14.04.2024 - ஞாயிற்றுக்கிழமை
காலை 07.57 மணி முதல் காலை 09.56 மணிவரை
14.04.2024 - ஞாயிற்றுக்கிழமை
காலை 09.59 மணி முதல் பகல் 12.01 மணிவரை
14.04.2024 - ஞாயிற்றுக்கிழமை
இரவு 06.17 மணி முதல் இரவு 08.17 மணிவரை
15.04.2024 திங்கட்கிழமை
காலை 09.08 மணி முதல் காலை 09.51 மணி வரை
15.04.2024 திங்கட்கிழமை
காலை 09.55 மணி முதல் காலை 10.30 மணி வரை

## குரோதி வருடப்பிறப்பு – திருக்கணித பஞ்சாங்கம்

13.04.2024 சனிக்கிழமை பி.ப 09 மணி 04 நிமிடத்தில் குரோதி வருடம் பிறக்கின்றது.

### விஷு புண்ணிய காலம் - மருத்துநீர் வைக்கும் நேரம்

13.04.2024 மாலை 05.04 மணி முதல் இரவு 01.04 மணி வரையுள்ள காலத்தில் தலையில் ஆலிலையும் காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்யவும்

### அணியும் ஆடை - நிறம்

கருநீல நிறமுடைய பட்டாடை அல்லது நீலக் கரை அமைந்த வெள்ளை பட்டாடை

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம் 3ம் 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ம் 2ம் 3ம் பாதங்கள், சித்திரை, விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை, அவிட்டம்

### கைவிஷேட நேரங்கள்

14.04.2024 - ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி முதல் காலை 11.05 மணிவரை
14.04.2024 - ஞாயிற்றுக்கிழமை
இரவு 06.30 மணி முதல் இரவு 07.45 மணிவரை
15.04.2024 திங்கட்கிழமை
காலை 06.00 மணி முதல் காலை 07.25 மணி வரை
15.04.2024 திங்கட்கிழமை
காலை 09.35 மணி முதல் காலை 10.35 மணி வரை

# பா.ஜ.கவின் ஆட்சி முடிவுக்கான ‘கவுண்டவுன்’ தொடங்கிவிட்டது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை,ஏப்.12

பா.ஜ.கவின் ஆட்சி முடிவுக்கான ‘கவுண்டவுன்’ தொடங்கிவிட்டது. எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது எக்ஸ் தளப் பதிவில் இது குறித்துக் கூறியிருப்பதாவது:-

புகழ்பெற்ற லோக்நிதி ஆய்வு அமைப்பு, 2024 மக்களவைத் தேர்தலில் முக்கியப் பிரச்சினைகள் எவை என மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தியுள்ளது.ய்

அதில், 27 சதவீதம் பேர் வேலையின்



மைதான் முக்கியப் பிரச்சினை என்றும், 23 சதவீதம் பேர் விலைவாசி உயர்வு என்றும், 55 சதவீதம் பேர் கடந்த 5 ஆண்டு பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் அதிகரித்துவிட்டதாகவும், ஏழை மக்களில் 76 சதவீதம் பேர் விலைவாசி உயர்வே இத்தேர்தலில் முக்கியப் பிரச்சினை என்றும் கூறியுள்ளனர்.

இதில் இருந்தே இந்த பா.ஜ.க. ஆட்சியின் முடிவுக்கான ‘கவுண்டவுன்’ ஆரம்பம் ஆகிவிட்டது. அதிகரித்துவிட்ட ஊழல், கார்ப்பரேட்டுகளிடமே மீண்டும் மீண்டும் குவியும் செல்வம், தொடரும் பாகுபாடுகள் என மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சி படுதோல்வி அடைந்துவிட்டதை மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். ‘சிலரைச் சில காலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது.’இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரியலூரில் சிறுத்தை நடமாட்டம் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிப்பு

செந்துறை, ஏப்.12

தமிழ்நாடு அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே உள்ள பொன்பரப்பி பகுதியில் 1000 ஏக்கர் பரப்பளவு உள்ள அரசு முந்திரிக் காட்டில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக பொன்பரப்பி கிராம மக்கள் சிலர் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட வன அலுவலர் இளங்கோவன் தலைமையில் வனத்துறையினர் பொன்பரப்பி கிராமத்திற்கு சென்று கிராம மக்கள் கூறிய சிறுத்தையின் கால் தடம் மற்றும் அடையாளங்கள் குறித்து விசாரணை நடத்தினர்.

நேற்று நள்ளிரவு நெருக்கமான குடியிருப்புகள் மற்றும் ஆள்கள் நடமாட்டம் மிகுந்த செந்துறை அரசு மருத்துவமனைக்குள் சிறுத்தை புகுந்துள்ளது.

சிறுத்தை மருத்துவமனை சாலையின் குறுக்கே வந்து கம்பி வேலியை தாண்டிச் செல்லும் காட்சிகள் மருத்துவமனையில் இருந்த சி.சி.டி.வி. கமராவில் பதிவாகி இருந்தன. இதனையடுத்து



செந்துறை பொலிஸார் வாகனத்தில் சென்றபடி ஒலி பெருக்கியின் மூலம் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாகவும் பொதுமக்கள் யாரும் வெளியில் வர வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த வனத்துறையினர் விரைந்து வந்து மருத்துவமனையில் இருந்த சி.சி.டி.வி. கமரா பதிவுகளைப் பார்த்து இது சிறுத்தைதான் என்று உறுதி செய்தனர். அதனைத் தொடர்ந்து ஏற்கனவே மயிலாடுதுறையில் சிறுத்தையை பிடிக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த சிறப்பு பிரிவு வனத்துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

அவர்கள் விரைந்து வந்து தெர்மல் டிரோன் கேமராவை வைத்து சிறுத்தையை இருக்கும் இடத்தை கண்காணித்தனர். ஆனால் விடிய விடிய தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து இன்று அதிகாலை முதல் சிமெண்ட் ஆலை சுரங்கம் மற்றும் முந்திரி காட்டில் சிறுத்தையை தேடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் செந்துறை, பொன்பரப்பி ஆகிய ஊர்களில் முந்திரி காடுகள், நீர்நிலைகளில் கமராக்கள் பொருத்தி கண்காணித்து வருகின்றனர். 3 பிரிவுகளாக பிரிந்து வனத்துறை அதிகாரிகள் கமராக்களை பொருத்தினர்.

இந்நிலையில் சிறுத்தை நடமாட்டத்தால் ஏற்பட்ட அச்சம் காரணமாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து அம்மாவட்ட கலெக்டர் ஆனி மேரி ஸ்வர்ணா உத்தரவிட்டுள்ளார்.

பள்ளி சென்ற மாணவர்கள் மதியம் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் என மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

# ராமேஸ்வரம் கஃபே குண்டுவெடிப்பு; முக்கிய குற்றவாளிகள் 2 பேர் கைது

பெங்களூருவில் உள்ள ராமேஸ்வரம் கஃபே குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்படைய முக்கிய குற்றவாளிகள் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மேற்கு வங்கத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குண்டுவெடிப்புக்கு பிறகு மேற்கு வங்கத்தில் தலைமறைவாக இருந்த முசாவிர் ஹுசைன் ஷாஜிப், அப்துல் மதின் தாஹா ஆகிய 2 பேரை தேசியப் புலனாய்வு முகாமை கைது செய்தது. முன்னதாக, வெடிகுண்டு தயாரிப்பதற்கான தளவாடங்களை விநியோகம் செய்த முஸாமில் ஷெரீஜ் என்பவர், கடந்த மார்ச் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

ராமேஸ்வரம் கஃபே குண்டுவெடிப்பு வழக்கில் தேசியப் புலனாய்வு முகாமை இதுவரை 3 பேரை கைது செய்தது குறிப்பிடத்தக்கது.

# படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று பிலிப்பைன்சில் விழுந்து நொறுங்கியது

மணிலா,ஏப்.12

பிலிப்பைன்சில் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து நொறுங்கியது.

பிலிப்பைன்சின் காவிட் மாகாணத்தில் உள்ள கடற்படை தளத்தில் வழக்கமான இராணுவ பயிற்சிகள் நடைபெற்றன. இதற்காக சாங்கி விமான நிலையத்தில் இருந்து கடற்படை தளத்துக்கு ஹெலிக்கொப்டர் ஒன்று புறப்பட்டது. ஆனால் புறப்பட்ட சிறிதுநேரத்தில் அந்த ஹெலிக்கொப்டர் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனால் நிலைதடுமாறி கேவிட் சிட்டியில் உள்ள ஒரு சந்தைப்பகுதி அருகே ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கியது. ஹெலிக்கொப்டர் கீழே விழுவதை பார்த்த பொதுமக்கள் பதறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். இந்த விபத்தில் 2 இராணுவ வீரர்கள் உடல் சிதறி பலியாகினர்.



இதனையடுத்து இராணுவப் பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

# தென்கொரியத் தேர்தலில் எதிர்க்கட்சி அபார வெற்றி

## அதிபர் யூன் சுக் இயோலுக்கு இனிக் கஷ்டகாலம்

சியோல்,பெப்.12

தென்கொரியா நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி அபார வெற்றி பெற்றிருக்கின்றது.

தென்கொரியாவில் அதிபர் யூன் சுக் இயோல் தலைமையிலான ஆட்சி நடைபெறுகிறது. அங்கு அதிபருக்கு அடுத்தபடியான அதிகாரத்தில் இருப்பவர் பிரதமர் ஆவார்.

அதன்படி ஆளும் மக்கள் சக்தி கட்சி கூட்டணி சார்பில் ஹான் டக்-சூ பிரதமராக இருந்தார். இவரது பதவிக் காலம் முடிவதால் நேற்று முன்தினம் (புதன்கிழமை) அங்கு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் வாக்காளர்கள் நீண்ட ஆர்வமுடன் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

தென்கொரியாவில் மொத்தம் 300



நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி கூட்டணி 189 இடங்களைக் கைப்பற்றியது. ஆளும் பழமைவாத கட்சி கூட்டணி வெறும் 111 இடங்களை மட்டுமே வென்றுள்ளன.

இதன் மூலம் 5 இல் 3 பங்கு இடங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சி கூட்டணி அபார வெற்றி பெற்றது. எனவே தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று பிரதமர் ஹான் டக்-சூ மற்றும் அதிபரின் மூத்த ஆலோசகர்கள் பலர் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர். அதேபோல் ஆளும் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் ஹான் டோங்-ஹூனும் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். முக்கிய தலைவர்கள் பதவி விலகுவது அதிபர் யூன் சுக் இயோலுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

அதேசமயம் 200 இடங்களை வென்று அதிபரை பதவி நீக்கம் செய்யக்கூடிய சூப்பர் மெஜாரிட்டியை அவர்கள் பெறவில்லை.

எனினும் மீதமுள்ள தமது 3 ஆண்டுகள் பதவிக் காலத்தில் அதிபர் யூன் சுக் இயோல் தீவிரமான அரசியல் எதிர்ப்பைச் சமாளிக்க நேரிடும் என அங்குள்ள ஊடகங்கள் கூறுகின்றன.

# 24 கோடி குழந்தைகளுக்கு கடும் வெப்பத்தினால் பாதிப்பு

## எச்சரிக்கின்றது யுனிசெவ் அமைப்பு

இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கடும் வெப்பம் மக்களை வாட்டி வதைத்து வருகிறது.

கடும் வெப்ப அலை காரணமாக கிழக்கு ஆசிய நாடுகளில் 24 கோடி குழந்தைகள் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கடும் வெப்பம் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. இதன் காரணமாக பெரியவர்களை விட குழந்தைகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என யுனிசெவ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டும் சுமார் 24 கோடி குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் இருதய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வீடுகளிலும், பள்ளிகளிலும் குழந்தைகள் வெயிலில் விளையாடுவதை தவிர்க்கவும், கோடை காலத்திற்கு ஏற்ற ஆடைகளை அணியவும் ஐ.நா. அறிவுறுத்தியுள்ளது.



பக்கங்கள் 06

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 12/04/2024

## டொரன்ரோவில் இன்று காலை வேளை மழை

ஒன்ராரியோ,ஏப்ரல்12

டொரன்ரோவில் இன்று வெள்ளிக்கிழமை காலை வரை 45 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும் என விசேட வானிலை C2



# அனர்த்த மீட்பு தொண்டர் படையினருக்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஊக்குவிப்பு!

**ஒன்ராரியோ,ஏப்ரல்12**

**இயற்கை அனர்த்தங்களுக்குப் பதிலளிப்பதற்கான பூர்வீகக் குடியினருக்கு 166 மில்லியன் டொலர்கள் 2024 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.**




இதுதொடர்பில் நிதியமைச்சர் கிறிஸ்டியா பிரிலான்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'தன்னார்வ தீயணைப்பு வீரர்கள் மற்றும் தேடல் மற்றும் மீட்பு தன்னார்வலர்கள் கனடியர்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான கனடியர்கள் தங்கள் நேரத்தை தன்னார்வமாக முன்வந்து, தங்கள் சொந்த பாதுகாப்பை தியாகம் செய்து, தங்கள் அண்டை நாடுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். நோவா ஸ்கோச்சியாவில் ஏற்பட்ட வெள்ளம் அல்லது பிரிட்டிஷ் கொலம்பியாவில் காட்டுத்தீ ஏற்பட்டால், C2

# வேலைவாய்ப்புகள் சட்டமூலத் திருத்தங்கள் மீது நேற்றும் இன்றும் நாடாளுமன்றத்தில் வாக்களிப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்12

அரசாங்கத்தின் நிலையான வேலைவாய்ப்புகள் சட்டமூலத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் முன்வைத்துள்ள 200இற்கும் மேற்பட்ட திருத்தங்களில் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கடந்த இலையுதிர் காலத்தில் நாடாளுமன்ற குழுவில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் சி-50 சட்டமூலத்தில் முன்வைத்த 20,000 மாற்றங்களில் எஞ்சிய திருத்தங்களாக இவை உள்ளன.

அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலைத் தடுப்பதற்கான கன்சர்வேட்டிவ் கட்சியினர் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இந்த திருத்தங்களை மேற்கொண்டுள்ளனர் என ஆளும் லிபரல் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

சக்திப் பணியாளர்களுக்கு புதிய திறன்கள் மற்றும் வேலைத் தகைமைகளுக்கு தயாராவதற்கு உதவுவதற்கு அரசாங்கம் எவ்வாறு தயாராக வேண்டும் என்பதனை கனடிய நிலையான தொழில்கள் சட்டமானது விளக்குகின்றது.






# மதச்சார்பின்மைச் சட்டத்தை கடைசி வரைப் பாதுகாப்போம்

## கியூபெக் நீதி அமைச்சர் தெரிவிப்பு

கியூபெக்,ஏப்ரல்12

மாகாணத்தின் மதச்சார்பின்மை சட்டத்தை கடைசி வரை பாதுகாப்பதாக கியூபெக் மாகாண நீதி அமைச்சர் சைமன் ஜொலின்-பரேட் தெரிவித்துள்ளார்.

கனடிய உயர்நீதிமன்றத்தின் மொன்ரியல் ஆங்கில பாடசாலை சபையினர் மேன்முறையீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதையடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் 21 தொடர்பில் மத்திய அரசாங்கத்தை தலையிட வேண்டாம் என நீதி அமைச்சர் சைமன் ஜொலின்-பரேட் குறிப்பிட்டுள்ளார்.

'கியூபெக்கில் அரசும் மதங்களும் தனித்தனியாக இருப்பதால் நாங்கள் எப்போதும் அரசின் மதச்சார் பின்மையை பாதுகாப்போம், இது தொடர்பில் சமரசம் செய்துகொள்ள மாட்டோம்' என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கியூபெக்கின் மேல்முறையீட்டு நீதிமன்றம் பில் 21 அரசமைப்பிற்கு உட்பட்டது என்று பெப்ரவரி மாதம் தீர்ப்பளித்தது.

சட்டத்தின் சில முக்கிய கூறுகளைப் பயன்படுத்துவதில் இருந்து ஆங்கிலப் பாடசாலை சபைகளுக்கு விலக்கு அளித்த கீழ் நீதிமன்றத் தீர்ப்பை இந்த மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்மானம் இரத்து செய்தது.

கனடிய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான சாசனத்தின் சிறுபான்மை மொழி உரிமைகள் மற்றும் பாலின சமத்துவ விதிகளை மீறுவதாக 2019 சட்டத்தை பாடசாலை சபை சவாலுக்குட்படுத்தி வருகின்றது.

# நாடாளுமன்றக் குழுவின் முன்னால் பெல் கனடாவின் நிர்வாகி விளக்கம்

ஒன்ராரியோ,ஏப்ரல்12

கனடாவின் முன்னணி தொலைத்தொடர்பு சேவைகள் வழங்குனரான பெல் கனடாவில் வேலைவாய்ப்புக்களை குறைத்தமையை அந்நிறுவனத்தின் தலைவர் நியாயப் படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற குழுவினால் லிபரல், கன்சர்வேட்டிவ் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியினர் பெல் கனடாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மிர்கோ பிபிக்கினை முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

பெல் கனடா நிறுவனத்தின் 9 சதவீதமானவர்களை பதவி நீக்கிய விடயம் தொடர்பில் நாடாளுமன்ற குழுவின் முன்னால் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரியில் 4,800 தொழில்களை நீக்குவதாகவும், 103 வானொலி நிலையங்களில் 45 நிலையங்களை விற்பனை செய்வதாகவும், தொலைக்காட்சி நிலையங்களை நிறுத்துவதாகவும் பெல் கனடா அறிவித்திருந்தது.

அரசாங்க மானியம் பெற்று வரும் நிறுவனம் வேலைநீக்கம் செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.



## டொரன்ரோவில்...

அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவின் சுற்றுச்சூழல் வியாழக் கிழமை பிற்பகல் நகரத்தில் அதிக மழை பெய்யும் காலங்களுக்கு மத்தியில் மற்றும் இன்று மாலை இடியுடன் கூடிய மழைக்கு முன்னதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இடியுடன் கூடிய மழையினால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் மொத்தமாக 50 மிமீ மழை பெய்யக்கூடும் என்றும், இதனால் திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் சாலைகளில் தண்ணீர் தேங்கக்கூடும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமைக்குப் பின்னர், சனிக்கிழமை அதிகாலை மழையைத் தொடர்ந்து வார இறுதியில் குளிர்ச்சி யாகவும் காற்றாகவும் இருக்கும் எனவும், அடுத்த வாரம் வெப்பம் மற்றும் வெயில் தொடங்கும் முன் ஞாயிற்றுக்கிழமை மழை பெய்யும் அபாயம் உள்ளதாகவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



## அனர்த்த மீட்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தன்னார்வலர்கள் தீயணைப்பு மற்றும் தேடுதல் மற்றும் மீட்புக்கு உதவ தொடர்ந்து மேலே சென்று வருகின்றனர்.

இதை அங்கீகரிக்கும் வகையில், 2024 வரவு – செலவுத் திட்டத்தில் தன்னார்வ தீயணைப்பு வீரர்கள் வரிக் கடன் மற்றும் தேடல் மற்றும் மீட்புத் தொண் டர்கள் வரிக் கடன் ஆகியவற்றை இரட்டிப் பாக்க முன்மொழியும் என்று மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.

இதன் பொருள், 2024 மற்றும் அடுத்தடுத்த வரி ஆண்டுகளில் 3,000 டொலர்கள் முதல் 6,000 டொலர்கள் வரை வரிக் கடன் அதிகரிக்கும், இது தன்னார்வ தீயணைப்பு வீரர்களுக்கு ஆண்டுக்கு 900 டொலர்கள் வரை சேமிக்கும். இந்த அதிகரிப்பு குறிப்பாக கிராமப்புற சமூகங்களுக்கு பயனளிக்கும், அங்கு தீயணைப்பு வீரர்கள் பெரும்பாலும் தன்னார்வலர்களாக உள்ளனர் மற்றும் அவர்கள் காலநிலை மாற்றத்தால் அடிக் கடி காட்டுத்தீயை எதிர்கொள்கின்றனர். அடுத்த ஆறு ஆண்டுகளில், இது நாடு முழுவதும் உள்ள தன்னார்வ தீயணைப்பு வீரர்கள் மற்றும் தேடல் மற்றும் மீட்பு தன்னார்வலர்களுக்கான புதிய ஆதரவில் சுமார் 105 மில்லியன் டொலர்களைக் குறிக்கிறது.

இன்றைய அறிவிப்பில் ஐந்தாண் டுகளில் 166.2 மில்லியன் டொலர்கள் பூர்வீகக் குடிகளின் அவசர முகா மைத்துவம் மற்றும் தயார்நிலைக்கு ஆதரவாக புதிய நிதியுதவியும் அடங்கும். பல பூர்வீகக் குடிகளின் சமூகங்கள் குறிப்பாக இயற்கை பேரழிவுகளின் தாக்கத்தால் பாதிக்கப்படக்கூடியவை என்பதை உணர்ந்து, இந்த முதலீடு பூர்வீகக் குடிகள் தங்கள் சமூகங்களைப் பாதுகாக்க சிறந்த ஆதரவை வழங்கும்.' – என்று உள்ளது.



# வெளிநாட்டுத் தலையீடுகள் ‘பெரிய சவாலாக’ உள்ளன!

## கனடியப் பிரதமர் முன் பிரான்ஸ் பிரதமர் தெரிவிப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்12

வெளிநாட்டு தலையீடு முயற்சிகள் ஒரு ‘பெரிய சவாலாக’ உள்ளன எனவும், இதனை நாடுகள் தங்கள் குடிமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் பிரான்ஸ் நாட்டுப் பிரதமர் கேப்ரியல் அட்டல் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரான்ஸ் பிரதமர், இங்கு கனடியப் பிரதமருடன் இணைந்து ஊடகங்களைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

இணையத் தாக்குதல்கள் மற்றும் தவறான தகவல்கள் பெரும்பாலும் வெளிநாட்டு குறுக்கீட்டின் ஒரு பகுதியாக இருக்கும் எனவும், இணையம் உட்பட, இதனை பல இடங்களில் பார்ப்பதாகவும் அட்டல் குறிப்பிட்டார்.

கடந்த மாதம், இணையம் ஊடாக முன்னெடுக்கப்படும் தாக்குதல்களை சமாளிப்பதற்கான ஒரு சிறப்பு நெருக்கடி மையத்தை பிரான்ஸ் அரசாங்கம் நிறுவியது.

‘நாம் செய்ய வேண்டியது இந்த குறுக்கீட்டின் அபாயங்கள் குறித்து அனைவரையும் எச்சரிக்க வேண்டும்’ என்று பிரதமர் அட்டல் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் குறுக்கீடு முயற்சிகள் குறித்து கனடிய விசாரணையில் ட்ரூடோ சாட்சியமளித்த ஒரு நாளுக்குப் பின்னர் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.



# 1.3 மில்லியன் மேலதிக வீடுகளை 2030க்குள் நிர்மாணிக்க வேண்டும்

ஒன்ராரியோ,ஏப்ரல்12

2030ஆம் ஆண்டுக்குள் கனடா நாட்டின் வீட்டு இடைவெளியை அகற்ற 1.3 மில்லியன் மேலதிக வீடுகளை நிர்மாணிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற வரவு – செலவுத்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு – செலவுத்திட்ட அதிகாரியினால் புதிதாக வெளியிடப்பட்ட இந்த அறிக்கையானது, கனடாவின் காலியிட விகிதத்தை வரலாற்று சராசரிக்கு மீட்டெடுக்க இன்னும் எத்தனை வீடுகள் கட்டப்பட வேண்டும் என்பது குறித்து ஆராய்கின்றது.

அந்த அளவுகோல்களின் அடிப்படையில், கனடா தற்போது இருப்பதை விட வருடத்திற்கு 181,000 வீடுகளைக் கட்ட வேண்டும் என்று நாடாளுமன்ற வரவு – செலவுத்திட்ட அலுவலகம் மதிப்பிடுகிறது.

வீட்டு வசதியை மேம்படுத்துவதற்கான சமீபத்திய நாடாளுமன்ற முயற்சிகள் அல்லது தற்காலிக குடியிருப்பாளர்கள் மீது ஒட்டாவா புதிதாக விதிக்கப்பட்ட வரம்பை அறிக்கை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.




# 300 திட்டங்கள், முன்முயற்சிகளில் செயற்கை நுண்ணறிவுப் பிரயோகம்

ஒன்ராரியோ,ஏப்ரல்12

கனடாவின் மத்திய அரசு கிட்டத்தட்ட 300 திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தியுள்ளமையை புதிய ஆராய்ச்சி ஒன்று கண்டறிந்துள்ளது.

வரி வழக்குகளின் விளைவுகளை கணிக்க உதவுவது, தற்காலிக விசா விண்ணப்பங்களை வரிசைப்படுத்துவது மற்றும் பணியமர்த்துவதில் பன்முகத் தன்மையை மேம்படுத்துவது உட்பட பல்வேறு செயற்பாடுகளுக்கு செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல் அணுகல் கோரிக்கைகளைப் பயன்படுத்தி தரவுத்தளத்தை ஒன்றாக இணைத்த வெஸ்டர்ன் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியரான ஜோனா ரெட்டன் இதனைக் கண்ட றிந்துள்ளார்.

பதிவேட்டில் உள்ள 303 தானியங்கி கருவிகளில், 95 சதவீதம் மத்திய அரசு நிறுவனங்களால் பயன்படுத்தப் படுகின்றனஎனக்கண்டறியப்பட்டுள்ளது.

எந்த மாதிரியான அமைப்புகள் பயன்பாட்டில் இருக்க வேண்டும் என்பது பற்றி இன்னும் அதிகமான பொது விவாதங்கள் இருக்க வேண்டும் எனவும், மேலும் இந்த அமைப்புகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றி மேலும் பொது தகவல்கள் கிடைக்க வேண்டும் எனவும் வெஸ்டர்ன் பல் கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரான ஜோனா ரெட்டன் கூறியுள்ளார்.

லிபரல் அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுச் சட்டத்தில் உள்ள ஒரு சிக்கலை தரவு வெளிப்படுத்துகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till April 14th

LOWEST PRICE LB 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Small Onion

LOWEST PRICE LB 1.49$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Blue Fish

LOWEST PRICE 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET




ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 5.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சுறா fish

## இந்த வாரம் Gunaam's super market தரும் Super Deal

| | | |
|---|---|---|
| Harischandra Pappadam | - | $1.00 |
| MR.Goudas Table Salt | - | $1.00 |
| MR.Goudas Sea Salt | - | $1.49 |
| Blue Sea Tin Fish | - | $1.99 |
| Baba Uppuma mix | - | $2.99 |
| Chocolate Swiss Roll | - | $3.99 |
| 200g Tamarind 5for | - | $5.00 |
| Nestum Seriyal | - | $5.99 |
| Kott mee Noodles 6for | - | $5.99 |
| Raigam Noodles 2for | - | $5.00 |
| 7lb Brown Sugar | - | $8.99 |
| 3lt MR.Goudas Sunflower oil | - | $8.99 |
| Maharaja Rice Flour | - | $8.99 |
| Niru அவித்த மா | - | $8.99 |
| AROY–D Coconut Milk Tin 4for - $10.00 | | |
| MR.Goudas Coconut Milk Powder 3for - $10.00 | | |
| Niru Tin Fish 4for | - | $10.00 |
| 900g maggi Coconut Powder | - | $11.99 |
| Maharaja Curry Powder | - | 11.99 |

| | | |
|---|---|---|
| Maharaja Basmati Rice | - | $13.99 |
| EggPlant | - | $1.49lb |
| Drumstick | - | $4.99lb |
| Small Onion | - | 4.99lb |
| Rasavalli | - | $5.99lb |
| Karunayam | - | $4.99lb |
| Super deal gift mysoor Daal | - | $1.00 |

### Fish Market Special Sale

| | | |
|---|---|---|
| ஊர்க்கோழி | - | $6.99 |
| Ceylon விளைமீன் | - | $7.99lb |
| Blue fish | - | $3.99lb |
| இறால் | - | $3.99lb |
| சுறா Fish | - | $5.99lb |
| திரளி | - | $5.99lb |
| Ceylon பாரை | - | $8.99lb |
| Ceylon சாரள் | - | $7.99lb |
| KO King fish | - | $7.99lb |
| KO Salmon fish | - | $7.99lb |
| Sea Breem fish | - | $7.99lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998



# டவுன்டவுன் நடைபாதையில் நேற்று துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்

ஒன்ராரியோ,ஏப்ரல்12

டவுன்டவுன் நடைபாதையில் நேற்று ஏப்ரல் 11ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 30 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

36 வயதான பெண் மற்றும் 33 வயது ஆணும் பலத்த காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

குயின் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் போர்ட் லேண்ட் ஸ்ட்ரீட் ஆகியவற்றிற்கு அதிகாலை 2:36 மணியளவில் போர்ட் லேண்ட் மற்றும் அருகிலுள்ள லேன் வேக்கு இடையே தெருவின் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு வெளியே துப்பாக்கிச் சூடு தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பெரியவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், மூன்றில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமையைப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.




# 11 வயதுச் சிறுமி உட்பட இருவர் மீது குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல் 12

11 வயது சிறுமி உள்ளடங்கலாக இருவரைக் கைது செய்துள்ள பீல் பிராந்திய பொலிஸார், அவர்கள் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆயுதம் ஏந்திய கார் திருட்டு மற்றும் கடந்த பெப்ரவரியில் பிரம்டனில் கத்தியால் குத்திய சம்பவங்கள் தொடர்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மூன்றாவது சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, இந்த சம்பவம் பெப்ரவரி 22ஆம் திகதியன்று கென்னடி சாலை மற்றும் குயின் ஸ்ட்ரீட் கிழக்குக்கு அருகிலுள்ள உயர்நிலைப் பாடசாலை வாகன நிறுத்துமிடத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர்களின் பெயர்களை இளைஞர் குற்றவியல் நீதிச் சட்டத்தின் கீழ் பொலிஸார் வெளியிடவில்லை.